தம்பலகமம் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 17 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்பலகமம் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டில் சபையினால் தம்பலகமத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொது நூலக கட்டடத்திற்கு ஏற்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,325,150 தொகையாக காணப்பட்ட போதிலும் காணி கட்டடக் கணக்கு மற்றும் மூலதனச் சொத்துக்காக செலவு வருமான பங்களிப்புக் கணக்கில் ரூபா 4,414,031 தொகையாக பதியப்பட்டுள்ளமையால் காணி கட்டிடத்தின் பெறுமதி ரூபா 88,881 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் கட்டடத்தின் மொத்தப் பெறுமதியை எவ்வாறு சபை கணிப்பீடு செய்தது என்ற கொள்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 53,684,419 தொகையான காணி கட்டிடங்கள், பொறித்தொகுதிகள், மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றுக்கான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |

| | |
|---|---|
| (i) அத்தியாயம் IX இன் பிரிவு 180 | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பாதுகாப்பு பிணைப் பணத்தின் அளவு தீர்மாணிக்கப்படாததால் பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) மாகாண திறைசேரி சுற்றுநிருப இல PT4/2017 | பிரதேச சபைகள் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான உச்ச எல்லை ரூபா 500,000 தொகை வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இச்சுற்றுநிருபத்தை மீறுவதை நோக்கமாகக் கொண்டு 2017 நவம்பர் 16 ஆம் திகதியன்று செய்யப்பட்ட ரூபா 621,380 தொகையான தளபாடம் கொள்வனவிற்கான கேள்வி கோரல் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முறையே ரூபா 230,500, ரூபா 380,880 தொகைக்கு தளபாடக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 2,719,558 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 393,131 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,326,427 முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 3.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2016.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வாடகை | 11,019 | 6,502 | 6,348 | 153 | 9,157 | 8,187 | 8,184 | 3 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,250 | 1,024 | 1,024 | - | 930 | 990 | 990 | - |
| ஏனையவை | 2,321 | 2,141 | 1,906 | 235 | 1,056 | 361 | 361 | - |

2.3 வீதவரிகள்

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனங்கண்டு அவற்றிற்கான ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 முத்திரைக் கட்டணம்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையினால் அதன் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் பாலம்போட்ட ஆறு பிரதேசத்தின் காட்டுப்பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றமையால் அங்குள்ள யானைகள் இக்கழிவுகளை உண்பதால் அந்த யானைகளுக்கு உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பமாக அமைகின்றது.

ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபை அடையாளம் காண்டிருந்த போதிலும் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உள்@ர் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 11,999,424 கடன் தொகையும் அதற்கான ரூபா 3,290,367 வட்டியையும் சபை இன்றுவரை கொடுத்துத் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 09 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் 2015 ஆம் ஆண்டு காணாமல் போயிருந்ததுடன் அதன் மூலம் பெறப்பட்ட பணம் பற்றுச்சீட்டுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் சபையில் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகியும் இவ்விடயம் தொடர்பாக மாகாண நிதி ஒழுங்கு விதி 71.3 இன் பிரகாரம் குறித்த ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் பற்றுச்சீட்டுப் புத்தகங்களின் மூலம் ஏற்பட்ட இழப்பை கணிப்பீடு செய்து அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் சபை தவறிவிட்டது.

3.3 மனிதவள முகாமைத்துவம்
---------------------------------------------

சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிய ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 18,527 தொகையான கடன் நிலுவையை அவர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 சொத்து முகாமைத்துவம்
----------------------------------------

3.4.1 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்
----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையில் காணப்படும் 02 மோட்டார் சைக்கிள்களை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது 03 வருட காலமாக விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஆ) தம்பலகமத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான சந்தைக் கட்டிடம் ரூபா 531,996 தொகையில் 2015 திசெம்பர் 23 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 மே 02 ஆம் திகதி வரை இக்கட்டடம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது.

3.4.2 வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு
---------------------------------------------------------

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு தொடர்பாக் இருப்புக் கணிப்பீட்டுச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டவாறு 33 வகையான பொருட்கள் விற்பனை செய்வதற்கும், 11 வகையான பொருட்களை திருத்தம் செய்வதற்கும், 06 வகையான பொருட்கள் அழிப்பதற்கும் 2018 மே 02 ஆம் திகதி வரை நடைவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
-------------------------------------------------------------

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச்சட்டத்தின் பிரகாரம் ஊழியர்களுக்கான நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புப் பணம் குறித்த மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்துக்குச் செலுத்தல் வேண்டும். எனினும் சபையில் 2012 சனவரி தொடக்கம் 2016 ஏப்ரல் வரை கடமை புரிந்த ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புப் பணத்தை அதற்குப் பொறுப்பான ஊழியர்கள் செலுத்த தவறியதனால் சபை ரூபா 52,673 தொகையை தண்டப்பணமாக செலுத்தியிருந்தது.

3.6 பெறுகை
--------------

3.6.1 பெறுகைத் திட்டம்
-----------------------------

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

சந்தைக் கட்டடம் நிர்மாணித்தல்

மாகாண சபை மற்றும் உள்@ராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 10,743,042 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சந்தைக் கட்டிடம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

1) ரூபா 3,277,422 பெறுமதியான கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 23 ஆம் திகதி வரை முற்றாக செய்யப்படாதிருந்த போதிலும் அவ்வேலைகள் செய்யப்பட்டதாக பொறுப்பான உத்தியோகத்தர்களால் கணியச்சிட்டை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

2) இவ்வேலை 2018 சனவரி 22 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலைகளை கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 23 ஆம் திகதி வரை நிறைவு செய்யாதிருந்த போதிலும் அவரிடமிருந்து ரூபா 537,152 தொகை தாமதக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 12% தொடக்கம் 80% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |
| (இ) ஒப்பந்த முகாமைத்துவம் | i. ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படல்.<br>ii. சன சமூக நிலையங்களுக்கு ஒப்பந்தம் வழங்கும் போது நிதி ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் பின்பற்றப்படல். |